பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 05 சனிக்கிழமை 21.09.2024 கதிர் 318

### இனி இது ரகசியம் அல்ல!

ரெலோவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் திடீரென்று ஜனாதிபதிக்குத் தனது ஆதரவைத் தெரிவித்த விவகாரம் கட்சியின் ☞ 2

# மானநஷ்ட வழக்கை இழந்தார் டக்ளஸ் அவரது மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி



யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் உதயன் பத்திரிகையில் 2010ஆம் ஆண்டு வெளியான செய்தி தனக்கு மானநஷ்டத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மாவட்ட நீதிபதி சதீஸ்கரன் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பிட்டார்.

'விக்கி லீக்ஸ்' எனப்பட்ட அமெரிக்க அரச ஆவணங்களில், அமெரிக்கத் தூதரகத்தால் அனுப்பப்பட்ட செய்திகளில் ஈபிடிபி கட்சியினரின் செயற்பாடுகள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்களைத் தொகுத்து உதயன் பத்திரிகை அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது.

அரச துணைப்படையாகச் செயற்பட்ட ஈபிடிபி சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், ஆட்கடத்தல்கள், அரச படையினருக்காகத் தமிழ் பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தல் ஆகிய குற்றங்களைப் புரிந்து வருகின்றனர் என்று கொழும்பில் இருந்த அமெரிக்கத் தூதரகம் வோஷிங்டனுக்கு அனுப்பிய கோவைகள் 'விக்கிலீக்ஸ்' இணையத்தில் வெளியிடப்பட்டிருந்தன. அதன் ஒரு பகுதியை மொழிபெயர்ப்புச் செய்து உதயன் பத்திரிகை வெளியிட்டிருந்தது. அமெரிக்காவைச் சேர்ந்தவரான ஜூலியன் அசாஞ்சேயினால் அமெரிக்க அரச தகவல் பரிமாற்றக் கேபிள்களில் ஊடுருவி எடுக்கப்பட்ட கோவைகளை அவர் 'விக்கிலீக்ஸ்' என்ற இணையத்தளம் மூலம் வெளியிட்டிருந்தார். ☞ 8

## 3 எம்.பிக்களுக்கு பெரமுனவில் தடை

சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு அந்த கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 2

## இயலாமையுள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கும் வசதி உண்டு

### ஆணைக்குழு அறிவிப்பு

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இயலாமைக்குள்ளான வாக்காளர்கள் வாக்களிக்க விசேட நடவடிக்கைகளை அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது குறித்து தேர்தல் ஆணைக்குழு அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், இயலாமைக்குள்ளான வாக்காளருடன் உதவியாளர் ஒருவரை உடன் அழைத்துச் செல்வதற்கான அனுமதி ☞ 8

### 9ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்ய

# இன்று வாக்களிப்பு



**ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் 39 பேர் வேட்பாளர்கள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்ததன் காரணமாக 38 பேர் போட்டிக்களத்தில் உள்ளனர். அவர்களில் இருந்து ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்காக இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரையில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.**

**நாடு முழுவதும் 11, 420 வாக்களிப்பு மத்தியநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் பணிகளுக்காக ஒரு இலட்சத்து** ☞ 2

## திலீபன் நினைவான காட்சியகம் திறப்பு

தியாக தீபம் திலீபனின் வரலாற்றை எடுத்தியம்பும் 'பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!' எனும் தொனிப்பொருளிலான ஆவணக் காட்சியகம் நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலய முன்றலில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது.

தியாகதீபம் திலீபனின் பிரதான ☞ 8

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

## விசாணைகள் முடியும்வரை விடைத்தாள் திருத்தப்படாது

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் வெளியே கசிந்தமை தொடர்பான விசாரணைகள் முடியும் வரை விடைத்தாள்கள் திருத்தப்படமாட்டா என்று கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் வட்ஸ்அப் செயலி ஊடாக பகிரப் ☞ 2

## இன்று வன்முறைகள் நடந்தால் தேர்தல் முடிவுகள் வெளிவராது

### ஆணையாளர் ரத்நாயக்க எச்சரிக்கை

ஜனாதிபதித்தேர்தலின் இன்றைய வாக்களிப்பின் போது வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றால் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின்போது வாக்களிப்பு நிலையத்தில் ஏதேனும் வன்முறை சம்பவங்கள் ஏற்படுமாக இருந்தால் அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்குகள் சூனியமாக்கப்படும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். ☞ 2





## உப்போடை பேச்சியம்மன் ஆலயம் தீப்பற்றி எரிந்தது

மட்டக்களப்பு கல்லடி - உப்போடையில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க சிறீ பேச்சியம்மன் ஆலயம் நேற்று இரவு திடீரென தீப்பிடித்து எரிந்து முற்றாக நாசமானது.

பூசைக்காக ஏற்றப்பட்டிருந்த விளக்கு இரவு 8.40 மணியளவில் பேச்சி அம்மனின் ஓலை குடிலில் பட்டு தீப்பிடித்து எரிந்துள்ளது எனக் கூறப்பட்டது.

உடனடியாகத் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டாலும் ஆலயத்தின் கூரை உட்பட அனைத்தும் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளன. எவருக்கும் உயிரிழப்புக்களோ காயங்களோ ஏற்படவில்லை.

பேச்சியம்மன் ஆலயத்தோடு இணைந்ததாக இருந்த தேத்தா மரமும் தீயினால் கருகிய நிலையில் காட்சியளிக்கிறது என்று பக்தர்கள் தெரிவித்தனர்.

ஆலயம் முற்று முழுதாக தீப்பற்றிய போதிலும் பேச்சியம்மன் சிலை ☞ 8

## பொதுத் தேர்தலுக்காக பஸில் விரைவில் நாடு திரும்புவாராம்

அமெரிக்கா சென்ற முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச, பொதுத்தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக விரைவில் நாடு திரும்புவார் என்று சிறீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

பஸில் ராஜபக்சவின் அமெரிக்க பயணம் தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

பஸில் ராஜபக்ச தனது மருத்துவப் பரிசோதனைகளுக்காக சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கா செல்லவிருந்தார். ஆனால், கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் தேர்தல் நடவடிக்கைகளுக்காக இறுதித் தருணம் வரை இரவு பகலாக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

அவர் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் பொதுத் தேர்தலுக்குத் தலைமை தாங்குவதற்காக விரைவில் ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

உயர்பீட அரசியல் குழுவிற்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது பற்றி நேற்று வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தேன். வினோ மீது நடவடிக்கை எடுப்பதாக இருந்தால், அரியத்தாருக்கு ஆதரவு என்று தெரிவித்துவிட்டு ரணிலுக்கு இரண்டாவது வாக்குப் போடுங்கள் என்று கூறிய கட்சிச் செயலாளர் ஜனா மீதும் பொதுக்கட்டமைப்பின் வேட்பாளருக்கு ஆதரவாக இறங்கி வேலை செய்யவேண்டாம் என்று கட்சியினரைத் தடுத்த கட்சியின் பேச்சாளர் சுரேன் மீதும், அரியத்தாருக்கு ஆதரவாக இறங்கி வேலை செய்யாத மன்னார், முல்லைத்தீவு மாவட்ட கிளையினர் மீதும் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள கிளையினரில் அரைவாசிப்பேரிடமும் விளக்கம் கேட்டு, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பலரும் அந்த 'சூம்' கூட்டத்தில் சீறியிருந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

ஆனால், அது பற்றியெல்லாம் ''பிறகு பார்க்கலாம்'' என்று ஒதுக்கிய தலைவர் செல்வமும் செயலாளர் ஜனாவும் பேச்சாளர் சுரேனும் கடைசியில் வினோவைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தி அவரிடம் விளக்கம் கேட்பது என்று முடிவெடுத்தனர் என்பதையும் வெளிப்படுத்தியிருதேன். அதைப் படித்துவிட்டு வினோ தரப்பிலிருந்து நேற்று ஒருவர் தொடர்புகொண்டார். ''எங்கே முடிந்தால் வினோ மீது கட்சியை நடவடிக்கை எடுக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்று என்னிடம் சவால்விட்டார். எனக்கு ''இதென்னடா வில்லங்கமாப் பேச்சு, இந்தச் சவாலை கட்சிக்காரர்களிடம் விடாமல் என்னிடம் விட்டு என்ன பயன்'' என்று யோசித்தபடியே, எதற்கும் இருக்கட்டும் என்று, ''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? கட்சி என்றால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் இருக்கத்தானே செய்யும், தலைவர், செயலாளருக்கு ஆகாட்டி எல்லாக் கட்சிக்குள்ளும் நடக்கும் விடயம்தானே இது'' என்று அவரின் வாயைக் கிளறினேன்.

''அப்படி அவர்கள் செய்யமாட்டார்கள், அது நடந்தால் தங்கள் வண்டவாளங்கள் முழுவதும் மக்கள் முன் வந்துகொட்டும் என்று அவர்களுக்கு நன்கு தெரியும், அவர்கள் யாருடன் என்ன கள்ள உறவு வைத்திருந்தார்கள், ரணிலுக்கு என்ன வாக்குறுதி கொடுத்தார்கள், அதற்காக என்னென்னவெல்லாம் செய்தார்கள் என்று எல்லாவற்றையும் வினோ ஆதாரங்களுடன் பகிரங்கப்படுத்துவார் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவசர அவசரமாக புதன்கிழமை இரவு 'சூம்' கூட்டத்தைக்கூட்டி வினோ மீது ஒழுக்காற்று நடவடிக்கை என்றவர்கள், கடிதத்தை அடித்து அனுப்பிவிட்டு ஊடகங்களுக்கு கொடுக்கச் சொல்லித் துள்ளிக்குதித்தவர்கள் ஏன் வெள்ளிக்கிழமை வரைக்கும் அதைச் செய்யவில்லை? அப்படிச் செய்வது சொந்தக்காசில் சூனியம் வைப்பதற்கு ஒப்பானது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும்'' எனப் பொரிந்து தள்ளினார்.

அப்படி என்னதான் இருக்கிறது என்று அவரது வாயிலிருந்து புடுங்குவதற்கு நிறையவே முயன்றேன் என்றாலும் அது பெரியளவில் வெற்றிபெறவில்லை. ஒரு மணித்தியாலமும் 49 நிமிடங்களும் நீடித்த அந்த உரையாடலில் இருந்து வினோ தரப்பின் நியாயங்கள் என்று சொல்லப்பட்டவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே தருகின்றேன்.

கட்சியின் தலைவர், செயலாளர், பேச்சாளர் ஆகியோர் ரணிலை நேரில் சந்தித்து, பொது வேட்பாளரை நிறுத்தினாலும் இரண்டாவது விருப்பு வாக்கை உங்களுக்கு வழங்குவதற்கான ஆதரவைப் பொதுக் கட்டமைப்பினரிடமிருந்து எப்படியும் பெற்றுத் தருவோம் என்று சொல்லிவிட்டு வந்து ஏதோ பொது வேட்பாளருக்குத்தான் ஆதரவு என்பதைப் போன்று தான் நடிக்கவில்லை. அவர்கள் கள்ள உறவில் ரணிலுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள், அதையே நான் வெளிப்படையாகச் செய்தேன் என்பது வினோவின் முதல் வாதம்.

கடைசியாக வவுனியாவில் நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ரணிலுக்கு இரண்டாவது வாக்குப் போடுமாறு கேட்பதற்கு பெரும்பான்மையான உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றால் இவர்கள் 2ஆவது வாக்கை அவருக்குப் போடும்படி எப்படியும் பரப்புரை செய்திருப்பார்கள்.

இத்தனைக்குப் பின்னரும் தமது கட்சியினர் அரியத்தாருக்காக வாக்குச் சேகரிக்கமாட்டார்கள் என்று ரணிலுக்கு உறுதிமொழி வழங்கியிருக்கிறார்கள், அதேபோன்று தமது கட்சியினர் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் முழுமையாகவும் யாழ்ப்பாணம், வவுனியா, யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களில் பகுதியளவிலும் பொது வேட்பாளருக்காக வேலை செய்யவில்லை என்றும் கட்சியின் செயலாளர் ரணிலுக்கு இரண்டாவது வாக்கைப் போடும்படி பகிரங்கமாகவே ஊடகங்களுக்கு அறிவித்தார் என்றும் அது மட்டுமல்லாமல் அந்தப் பேட்டியில் ரணிலை மிக உயர்வாகத் தூக்கி வைத்து அவர் பேசினார் என்றும் எப்படியிருந்தாலும் வடக்குகிழக்கில் ரணிலுக்கு விழும் வாக்குகளுக்குப் பாதகமாகத் தாங்கள் நடந்துகொள்ளமாட்டார்கள் என்று மீண்டும் மீண்டும் சத்தியம் செய்திருக்கிறார்கள். நான் (வினோ) அப்படி பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் இரட்டைவேடம் போடவில்லை. அவர்கள் திரைமறைவில் செய்ததை நான் வெளிப்படையாகவே செய்கின்றேன், அதுதான் வித்தியாசம் என்பது அவரது (வினோ) இரண்டாவது வாதம்.

இதற்காக என்னை கட்சியைவிட்டுத் தூக்க முயற்சித்தால் அவர்களின் 'டீல்' முழுவதையும் ஒன்றுவிடாமல் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துவேன். அப்போது அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கின்றேன் என்பது அவரது மூன்றாவது வாதம்.

கட்சி வினோ மீது நடவடிக்கை எடுக்குமா அல்லது அடக்கி வாசித்து தமது இரகசியங்களைப் பாதுகாத்துக்கொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விசேடமாக, பாதுகாப்புக் கடமைக்காக 63 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிஸார் களமிறக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் 17 லட்சத்து 65 ஆயிரத்து 351 பேர் வாக்களிக்கத்தகுதிபெற்றுள்ளனர். அவர்கள் வாக்களிப்பதற்காக ஆயிரத்து 204 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 லட்சத்து 92 ஆயிரத்து 280 வாக்காளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு லட்சத்து 907 வாக்காளர்களுமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 5 லட்சத்து 93 ஆயிரத்து 187 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்காக 511 வாக்கெடுப்பு நிலையங்களும் கிளிநொச்சியில் 108 வாக்கெடுப்பு நிலையங்களும் என 619 வாக்கெடுப்பு நிலையங்கள் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள 511 வாக்களிப்பு நிலையங்களினதும் வாக்குகளை எண்ணுவதற்காக, 41 வாக்கெண்ணும் நிலையங்களும், அஞ்சல் வாக்குகளை எண்ணுவதற்காக 14 வாக்கெண்ணும் நிலையங்களுமாக மத்திய கல்லூரியில் 55 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் 1 லட்சத்து 28 ஆயிரத்து 585 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். அவர்கள் வாக்களிப்பதற்காக வவுனியா மாவட்டத்தில் 152 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் கடைமைகளுக்காக பொலிஸார் உட்பட 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 86 ஆயிரத்து 889 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் அவர்கள் வாக்களிப்பதற்காக 137 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் 98 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் நிலையமான மாவட்ட செயலம் காணப்படவுள்ளதோடு அதன் பாதுகாப்புக்காக 64 பொலிஸாரும், 47 விசேட அதிரடிப்படையினரும் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். முறைப்பாட்டு பிரிவுக்கு 11 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் 98 வாக்களிப்பு நிலையங்களிலும் 2 பொலிஸார் வீதம் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக திருகோணமலை விபுலானந்தா கல்லூரி செயற்படவுள்ளது. அங்கு மொத்தமாக 318 வாக்களிப்பு நிலையங்கள் காணப்படுவதோடு மாவட்டத்தில் 3 லட்சத்த 15 ஆயிரத்து 925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 442 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 4 இலட்சத்து 49 ஆயிரத்து 686 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பாதுகாப்புப் பணியில் சுமார் ஆயிரத்து 500 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 5 லட்சத்து 55 ஆயிரத்து 432 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். அங்கு 528 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் 977 வாக்களிப்பு நிலையங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 14 தேர்தல் தொகுதிகள் உள்ளன. இத்தொகுதிகளில் இருந்து 14 லட்சத்து 17 ஆயிரத்து 226 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 534 வாக்களிப்பு நிலையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. 6 இலட்சத்து 5,292 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், அந்தத் தொகுதிகளில் மீண்டும் வாக்கெடுப்பை நடத்தும் வரையில் நாடளவிய ரீதியிலான இறுதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தேர்தல் நடவடிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு தரப்பினருக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

வாக்கு உங்கள் உரிமை, அதனை நாட்டு மக்கள் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கேட்டுக் கொண்டார்.

தேர்தல் காலத்தில் சட்டத்தை கடுமையாக செயற்படுத்துமாறு அனைத்து பாதுகாப்பு தரப்பினருக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் எந்தவொரு அவசர நிலைமையின் போதும் அழைப்பதற்காக முப்படையினரும் தயாராக வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவத்தார்.

# தேர்தல் முறைப்பாடுகள் நேற்றுத் திடீர் அதிகரிப்பு

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 269 முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

2024 ஜூலை 31 முதல் செப்டெம்பர் 20 வரை 5, 214 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதில் 1,656 முறைப்பாடுகள் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 3,415 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்தக் காலப்பகுதியில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 34 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரையில் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 4,680 முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு கண்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எஞ்சிய 534 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் தேர்தல் தொடர்பாக இதுவரை 45 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து வன்செயல்கள் அல்லது வன்முறைகளும் சட்ட மீறல்களாகவே காணப்படுகின்றன. தேர்தல் வன்முறைகள குறித்தான முறைப்பாடுகளைப் பதிவுசெய்வதற்குரிய தொலைபேசி இலக்கங்கள் எம்மால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 0766535805, 0719996002, 0212212293 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முறையிடலாம். அத்துடன் 0718789516 என்ற வாட்ஸ்அப் இலக்கம் ஊடாகவும் முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் - என்றார்.

# பிணைமுறி மறுசீரமைப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு

சர்வதேச பிணைமுறிப் பத்திரங்களை மறுசீரமைக்கும் ஆளும்தரப்பின் முடிவு மக்களின் அடிப்படை மனித உரிமையை மீறுவதாகத் தீர்ப்பளிக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவினால் இந்த மனு நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிதியமைச்சர், நிதியமைச்சின் செயலாளர், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட தரப்பினர் இதில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படும் கடனிற்காக, 5 முதல் 7 சதவீதத்திற்கு இடைப்பட்ட வட்டி வீதம் அறவிடப்படுவதாக மனுதாரர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 3 எம்.பிக்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.எம்.சந்திரசேன, இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ராதேவி வன்னியாராச்சி மற்றும் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன ஆகியோரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

2024 ஜூலை 29 நடைபெற்ற கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தில் கட்சியால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய தமது கட்சி வேட்பாளருக்கு ஆதரவளிக்காமல் வேறொரு வேட்பாளரை ஆதரித்தமைக்காக அவர்களது கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் அகில இலங்கை நிறைவேற்றுக் குழு, செயற்குழு, அரசியல் குழு உறுப்புரிமை மற்றும் கட்சியின் தேசிய அழைப்பாளர் பதவி ஆகியவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசாணைகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகவும் பரீட்சை இடம்பெறுவதற்கு முன்னரே கேள்விகள் வெளியாகியுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. பெற்றோர் எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டுள்ள தையும் அவதானிக்க முடிகிறது.

பரீட்சை கடமையின்போது முறையற்ற வகையில் செயற்பட்டதாக குறிப்பிடப்படும் ஆசிரியர்கள் மற்றும் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக தாபன விதிக்கோவைக்கு அமைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்விவகாரம் குறித்து கல்வி அமைச்சும், பரீட்சைகள் திணைக்களமும் கூடிய கரிசனை கொண்டுள்ளன. கல்வி அமைச்சின் ஊடாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாட ளிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் கல்வி அமைச்சின் மட்டத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

பரீட்சையை மீண்டும் நடத்துமாறும்,

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கண்காணிக்க களம் குதிக்கின்றது

தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கும் முகமாக கள பணிகளில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் அலுவலகர்கள் ஈடுபடவுள்ளனர் என இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள செய்தி குறிப்பில் -

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 'ஜனாதிபதி தேர்தல் - 2024' கண்காணிப்பு நடவடிக்கையை எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மேற்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கும், தேவை ஏற்படின் குறித்த இடத்திற்கு களவிஜயம் மேற்கொள்வதற்கும் ஆணைக்குழுவின் அலுவலர்கள் கடமையிலிருப்பார்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகமும் எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்தல் கண்காணிப்பு கடமைகளுக்காக திறந்திருக்கும் என்பதுடன், வாக்காளர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் ஏதேனும் உரிமை மீறலை எதிர்கொண்டால் 021-2222021 மற்றும் 070-3654910 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(05)

## வாக்களிப்பு நிலையத்தில் படம், காணொளி எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட தடை

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் அன்று வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிக்கும் சந்தர்ப்பங்களையும் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களையும் நிழற்படமெடுத்தல் மற்றும் வீடியோ எடுத்தல் அல்லது சமூக ஊடக வலைத்தளங்களில் வெளியிடுதல் தேர்தல் சட்டத்தை மீறும் செயல்கள் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஆகையால், அத்தகைய செயல்களைத் தவிர்க்குமாறு அனைத்து சமூக ஊடக வலைதள கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கும் அவற்றின் நிர்வாகிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு விடுத்துள்ளது.

(05)

## சுதந்திரமானதும் அமைதியானதுமான வாக்களிப்புக்கு நுவரெலியா தயார்

### நந்தன கலபட தெரிவிப்பு

நுவரெலியா மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமானதும் அமைதியானதுமான தேர்தலாக அமுல்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்கனவே தயார் நிலையில் உள்ளன என நுவரெலியா மாவட்ட செயலாளரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு மற்றும் வாக்குகளை எண்ணுவதற்கு தேவையான சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடும் விசேட செய்தியாளர் மாநாட்டை நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் -

2024 ஜனாதிபதித் தேர்தலுக்காக மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 6 லட்சத்து 5,292 ஆகும். இவர்கள் 534 வாக்குச் சாவடிகளில் வாக்களிக்கவுள்ளனர்.

நேற்று காலை 07 மணி முதல் நுவரெலியா மாநகர சபை மண்டபத்துக்கு பிரதம வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டு தேவையான வாகனங்களும் அதே இடத்தில் வாக்குப்பெட்டிகளும் வழங்கப்பட்டன. அவர்களுக்கு தேவையான உபகரணங்களை நுவரெலியா காமினி தேசிய பாடசாலை மற்றும் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் வாக்கு எண்ணும் நிலையங்களில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனையடுத்து, அவர்கள் தேர்தல் பணிகளை மேற்கொள்ளவுள்ள வாக்குச்சாவடிக்கு பாதுகாவலர்களின் துணையுடன் சென்றதுடன், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இன்று வாக்களிக்க தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளோம்.

அதேநேரம் மதியம் அலுவலர்களுடன் அடிப்படை பயிற்சி நடவடிக்கைகள் நடத்தப்பட்டன.

இன்று அதாவது ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் நாளான அன்று காலை ஏழு மணி முதல் வாக்குப்பதிவு நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை தயார் செய்து வாக்குப்பதிவு நடத்தவுள்ளனர்.

அதன் பிறகு இன்று மாலை 04.00 மணிக்கு வாக்குப்பதிவு பணிகளை முடித்து, வாக்குப்பெட்டிகளை விரைவில் எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்வோம் என நம்புகிறோம்.

இன்று மாலை 04.00 மணிக்கு நுவரெலியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள 11 தபால் மூல வாக்கு எண்ணும் நிலையங்களில் தபால் மூல வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமாகவுள்ளது.

அதேநேரம் இன்று மாலை 6.30 மணிக்கு பின்னர் காமினி தேசிய பாடசாலையில் அமைத்துள்ள 41 பொது வாக்குகளை எண்ணும் நிலைய மண்டபங்களில் வாக்கு எண்ணிக்கை ஆரம்பிக்கப்படும்.



நள்ளிரவு 12.00 மணிக்குள் அனைத்து தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் மற்றும் முதல் உத்தியோகபூர்வ வாக்குப்பதிவு முடிவுகள் வெளியாகும் என நம்புகிறோம்.

பாதுகாப்பு நோக்கங்களுக்காக பொலிஸ் அதிகாரிகள் உட்பட 1,784 பாதுகாப்புப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பேரிடர் ஏற்படும் பட்சத்தில் தேவையான அடிப்படை திட்டங்களை தயாரித்து, பேரிடர் மேலாண்மை குழுவினருடன் இணைந்து தேவையான தீர்வுகளை செயல்படுத்தி வருகிறோம்.

இந்த ஆண்டு தேர்தலை சுதந்திரமாகவும் அமைதியாகவும் நடத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் முன்கூட்டியே தயார் செய்துள்ளோம்.

நுவரெலியா மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு 36 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும், பாரதூரமான முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

(05)

## 32 கண்காணிப்பாளர்கள் இன்று தேர்தல் களத்தில்

### ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில்




இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அனைத்து மாவட்டங்களிலும் 32 குறுகிய கால தேர்தல் கண்காணிப்பாளர்களை கண்காணிப்பில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளதாவது -

குறுகியகால கண்காணிப்பாளர்கள் பிரசாரம் முடிவடைந்ததன் பின்னரான காலத்தில் இடம்பெறும்; தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு தினம் அன்றைய தினம் வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு ஆரம்பமாவது, வாக்களிப்பு, வாக்குகள் எண்ணப்படுவது தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுவது போன்றவற்றை கண்காணிப்பார்கள்.

இன்று எங்கள் பணியை வலுப்படுத்தும் குறுகியகால பார்வையாளர்கள் நகரங்கள் மற்றும் கிராமங்களிற்கு செல்வார்கள், அவர்களுடைய கண்காணிப்புகள் ஒன்பது மாகாணங்கள் குறித்த அவதானிப்புகளை மேற்கொள்வதற்கு இன்றியமையாதவையாகும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி தலைமை கண்காணிப்பாளர் இன்டாலசே தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் குறுகிய கால கண்காணிப்பாளர்கள் இரண்டு சர்வதேச குழுவாக செயற்படுவார்கள், அவர்கள் தங்கள் பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் தேர்தல் திணைக்களத்தில் இடம்பெறவுள்ள செயற்பாடுகள் குறித்து நன்குஎடுத்துரைக்கப்பட்டுள்ளது. 26 கண்காணிப்பாளர்களை ஏற்கனவே கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தியுள்ளோம், அவர்கள் ஓகஸ்ட்; 29 முதல் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் தேர்தலிற்கான தயாரிப்பு நடவடிக்கைகள், தேர்தல் பிரசாரத்தை கண்காணித்து வருகின்றனர்.(05)

## உதவிபொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாமவின் வாகனங்கள், காணிகளை முடக்கியது நீதிமன்றம்

*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான உத்திக்க பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்துக்கு உதவி செய்ததாக கூறப்படும் முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாமவுக்கு சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் 02 காணிகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை கொழும்பு மேல் நீதிமன்றம் முடக்கியுள்ளது.*

*லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகேவால் புதன்கிழமை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி அன்று நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.*

*இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு உதவி செய்ததாக கூறப்படும் முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரான சஞ்சீவ மகாநாம பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கடந்த 05 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 23 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)*

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உங்கள் எதிர்காலம் உங்கள் கைகளில்

இலங்கையின் 9ஆவது அரசுத் தலைவரைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு இன்று. இலங்கையின் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டவர்கள், வாக்களிப்பது ஒவ்வொருவரதும் ஜனநாயகக் கடமை என்று கருத்துபவர்கள் தவறாது, சுணங்காது நேரத்துடனேயே வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களியுங்கள். வாக்களிப்பது தவறு என்று கருதுபவர்கள் உங்கள் கருத்துக்களைச் சொல்லிவிட்டீர்கள் என்பதால் அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தமது விருப்பப்படி நடந்துகொள்ள வழிவிட்டு இந்த ஒரு நாள் ஒதுங்கிக் கொள்ளுங்கள். நாளை முதல் மீண்டும் உங்கள் கருத்துக்களைப் பரப்புரை செய்யலாம்.

யார் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் ஜனநாயகம்தான் இந்த நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்கின்றது. அது பெரும்பான்மை மக்களின் விருப்பு என்பதைப் பொறுத்தது. ஒட்டுமொத்த மக்களும் ஒருவர்கூட மாறுபடாமல் புறக்கணித்தால் தவிர வாக்களிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் யாரை ஆதரிக்கின்றனரோ அவர்தான் வெற்றிபெறப்போகின்றார். எனவே வாக்களிப்பதை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரும் இன்றையதினம் தவறாது வாக்களித்து இந்த நாட்டின் அடுத்த அரசுத் தலைவரைத் தெரிவு செய்வதில் தங்கள் பங்களிப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்தத் தேர்தல் முடிவு மூலமாக ஒருவர் இலங்கையின் அரசுத் தலைவராகி அடுத்த 5 வருடங்களுக்கு இங்குள்ள 2 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்குத் தலைமை தாங்கப் போகிறார். அவர்தான் இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகிறார். எனவே போட்டியிடுபவர்களில் அதற்குரியவர் யார் என்பதை நன்கு சிந்தித்து வாக்களிப்பதே சிறந்தது. உங்கள் தேவை, உங்கள் சிந்தனை, உங்கள் எதிர்பார்ப்பு என்பவற்றுக்கு ஏற்றவரைத் தெரிவுசெய்யுங்கள். அடுத்தவர் சொல்கிறார் என்பதற்காகவோ அடுத்தவர்களின் தேவைக்காகவோ வாக்களிக்காதீர்கள். ஏனெனில் அவர்களின் எதிர்காலம் மட்டுமல்ல உங்களின் எதிர்காலமும் இப்போது உங்கள் கைகளில்தான் உள்ளது.

வாக்களிப்பு அமைதியாகவும் நியாயமாகவும் சுதந்திரமாகவும் இடம்பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. எனவே வாக்களிக்க விரும்புகின்றவர்கள் அச்சமின்றி, நேரகாலத்துடனேயே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றுவிடுவது சிறந்தது. ஏதாவது அசம்பாவிதங்களோ, வாக்களிப்பு நிலையத்துக்கு அருகில் பரப்புரைகளோ, நிர்ப்பந்தங்களோ இருந்தால் அவை பற்றி உடனடியாகவே தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் அல்லது தேர்தல் ஆணைக்குழுவிடம் முறையிடுங்கள். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து வாக்களிப்பு சுமுகமாக நடைபெறுவதை உறுதிப்படுத்துவார்கள்.

வாக்களிப்பின் போதும் அதன் பின்னரும் வன்முறைகள் இடம்பெறக்கூடும் என்ற அச்சம் தேவையற்றது. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தகைய மிரட்டல்கள் மூலம் குறுக்கு வழியில் சிலர் வெற்றிபெற முயலக்கூடும். மக்கள் நிதானமாகவும் விழிப்புணர்வுடனும் செயற்படுவதன் மூலமே அதனைத் தடுக்க முடியும். வன்முறையாளர்களுக்கு இடமளிக்காமல் இருப்பது ஒவ்வொரு வாக்காளரதும் கடமை.

இதுவரை பல கட்சிகளுக்காக, பல வேட்பாளர்களுக்காக நீங்கள் பிளவுண்டிருக்கலாம். வாதப் பிரதிவாதங்கள் செய்திருக்கலாம். ஆனால், இன்று ஒரு கணம் இலங்கையின் எதிர்காலம், உங்களின் எதிர்காலம், உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் என்பவற்றைச் சிந்தித்து அதற்குப் பொருத்தமானவர்களுக்கு வாக்களியுங்கள்.

# அதிபயங்கர போரின் அடுத்த உத்தி!

**ஜானதன் லிவிங்ஸ்டன் ஸீகல்**

லெபனானில் பேஜர்களையும் வோக்கி



லெபனானில் வெடித்துச் சிதறிய வாக்கி டாக்கி...

டோக்கிகளையும் வெடிக்கச் செய்து இஸ்ரேல் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல் உத்தியின் காரணமாக, எதிர்காலத்தில் எங்கே வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் தாக்கி அழிக்கலாம்; அழிக்க முடியும்!

லெபனானிலும் சிரியாவின் சில இடங்களிலும் சில நாள்களுக்கு முன், செப். 17, ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் வசமிருந்த ஆயிரக்கணக்கான பேஜர்கள் திடீரென சொல்லிவைத்தாற்போல ஒரேநேரத்தில் வெடித்துச் சிதறின. இதில் உயிரிழப்பு 12, காயம் 2,800!

மறுநாள், செப். 18, இதே ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் வைத்திருந்த வோக்கி டோக்கிகளும் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின. உயிரிழப்பு 25, காயம் சுமார் 450!

உலகில் இதுவரையில் இதுபோன்ற, இந்த பாணியிலான தாக்குதல்கள் நடைபெற்றதில்லை. இஸ்ரேலின் இரகசிய உளவுப் படையான மொசாத் இதுபோன்ற புதிய உத்தியிலான தாக்குதல்களை நடத்துவதில் திறமை மிக்கது; இதற்கு எடுத்துக்காட்டான சம்பவங்கள் இருக்கின்றன.



வாக்கி டாக்கி வெடித்ததால் உருக்குலைந்த கார்...

ஆனால், இதுவரையிலும் இப்போதைய தாக்குதல்களைத் தாங்களே நடத்தியதாக இஸ்ரேல் ஒப்புக்கொள்ளவுமில்லை; மறுக்கவும் இல்லை. நூறு சதவிகிதமும் இஸ்ரேல்தான் காரணம் எனக் கூறப்பட்டாலும், ஹிஸ்புல்லா தீவிரவாத இயக்கம் தன்னுடைய உறுப்பினர்களுக்காக ஓர்டர் செய்திருந்த சுமார் 5 ஆயிரம் பேஜர்கள் இந்த ஆண்டு தொடக்கத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இதே காலகட்டத்தில்தான் இவர்களுக்காக வோக்கி டோக்கிகளுக்கும் ஆர்டர்கள் தரப்பட்டு வாங்கப்பட்டிருக்கின்றன.

பரவலான இந்த குண்டு வெடிப்புகள் தொடர்பான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. லெபனானில் சப்ளை செய்யப்படுவதற்கு முன்னரே இந்த பேஜர், வோக்கி டோக்கிகளில் யாரோ ‘கைவைத்திருக்க வேண்டும்’ எனக் கருதப்படுகிறது. சங்கேத குறிப்புகள் அல்லது ரேடியோ சமிக்ஞைகள் மூலம் வெடிக்கச் செய்யும் வகையில் சிறு அளவிலான வெடிபொருள்களை இந்த மின்னணு சாதனங்களில் பொதிந்து வைத்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

ஒருவேளை இதுவே உண்மையென்றால், மின்னணு சாதனங்களின் வழி உலகில் எங்கே வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் ஊடுருவலாம், தாக்குதல்களை நடத்தலாம் என்றாகிறது.

இத்தகைய தாக்குதல்களை மொசாத் தொடக்கி வைத்துள்ளதாகக் கருதப்படும் நிலையில், இதே பாணியை பிற தீவிரவாத குழுக்களும் பின்பற்றினால்...

### பேஜர்கள் எங்கிருந்து வந்தன?

தாய்வானைச் சேர்ந்த கோல்ட் அப்போலோ என்ற நிறுவனத்திடம்தான் இந்த பேஜர்களுக்கான ஓர்டர்களை ஹிஸ்புல்லா வழங்கியிருந்ததாக லெபனான் பாதுகாப்பு அலுவலர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், இந்தத் தாய்வான் நிறுவனமோ, இந்த பேஜர்கள் (ஏஆர்-924 மாடல்) யாவும் ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்ட்டிலுள்ள பிஏசி என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டவை. வடிவமைத்து கோல்ட் அப்போலோ பெயரைப் பயன்படுத்தி சில குறிப்பிட்ட பிராந்தியங்களில் தயாரிக்கவும் விற்கவும் இவர்கள் உரிமம் பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்த வெடிப்புகளைத் தொடர்ந்து, தன்னுடைய வணிக மதிப்பைக் குலைத்துவிட்டதாக பிஏசி நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுக்க கோல்ட் அப்போலோ திட்டமிட்டுவருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்த பிஏசி நிறுவனமே அனேகமாக மொசாத்தால் உருவாக்கப்பட்ட முகமூடி நிறுவனமாக இருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பேஜர்கள் விற்பனை தொடர்பாக, பல்கேரியாவைச் சேர்ந்த நோர்டா குளோபல் லிமிடெட் என்ற இன்னொரு நிறுவனமும் விசாரணை வளையத்துக்குள் இருக்கிறது.

### வோக்கி டோக்கிகள் வந்த வழி!

தவிர, குண்டுகளாக மாறி வெடித்த வாக்கி டாக்கிகளைப் பொருத்தவரை இவற்றில் இப்போதும் சந்தையில் இருக்கும் ஜப்பானிய ரேடியோ நிறுவனமான ஐசிஓஎம்மின் இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், தற்போது ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கு வழங்கப்பட்ட ஐசி - வி82 மாடல் வோக்கி டோக்கிகளைக் கடந்த பத்தாண்டுகளாக இந்த நிறுவனம்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# அதிபயங்கர போரின் அடுத்த உத்தி!

4ம் பக்க தொடர்ச்சி...........

தயாரிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. எனினும், இந்த பழைய மாடல் வோக்கி டோக்கிகள் இன்னமும் இணையவெளியில் விற்பனைக்குக் கிடைக்கிறது; மட்டுமின்றி, இவற்றின் போலிகளும் வெளிச் சந்தையில் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

**பேஜர்களும் வோக்கி டோக்கிகளும் ஏன்?**

ஏறத்தாழ இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய தொழில்நுட்பம் சார்ந்த புழக்கத்திலிருந்த இந்த பேஜர்களையும் வோக்கி டோக்கிகளையும் யாராவது இந்த நவீன காலத்தில் பயன்படுத்துவார்களா?பிறகுஎதற்காகஹிஸ்புல்லாதீவிரவாதிகள் மட்டும் இவற்றைப் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள்?

இதற்கும் நல்ல காரணம் இருக்கிறது. ஹெஸ்புல்லா தீவிரவாதிகளும் எல்லாரையும் போல 'நவீன யுகத்தின் நன்கொடை(?)'யான செல்போன்களைத்தான் பயன்படுத்திக்கொண்டிருந்தனர். ஆனால், இந்த செல்போன் சிக்னல்கள் மூலம் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை இஸ்ரேலால் எளிதில் கண்காணிக்க முடியும் என சந்தேகப்பட்டதால் ஒட்டுமொத்தமாக செல்போன்களைத் தலையைச் சுற்றி வீசிவிட்டு பேஜர்களுக்கும் வோக்கி டோக்கிகளுக்கும் இவர்கள் மாறியிருக்கின்றனர்.

இதுபற்றித் தீவிரவாதிகளை ஹிஸ்புல்லாவின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா பின்வருமாறு எச்சரித்தாராம்: "இஸ்ரேலிய உளவாளிகளைவிடவும்உங்கள்செல்போன்கள்ஆபத்தானவை, அவற்றை உடைத்துப் போடுங்கள், புதைத்துவிடுங்கள் அல்லது இரும்புப் பெட்டகங்களில் வைத்துப் பூட்டிவிடுங்கள்".



பேஜர்கள் வெடிப்பில் உயிரிழந்தோர் உடல்கள்...

எனவேதான், ஹிஸ்புல்லா சம்பந்தப்பட்ட அனைவரும் கடந்த காலத்துக்குத் திரும்பி பேஜர்களையும் வோக்கி டோக்கிகளையும் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றனர்.

ஏற்கெனவே, சர்வமும் கணினிமயத்தால் உலகம் முழுவதுமே பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. யாருடைய இணைய தளத்திற்குள்ளும் - திறமை இருந்தால் - யார் வேண்டுமானாலும் புகுந்து என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் என்றாகிவிட்டிருக்கிறது.

ஒட்டுமொத்த உலகமும் ஒன்றாகிவிட்ட நிலையில் உலகில் எங்கெங்கோ தயாரிக்கப்பட்ட பொருள்கள் எங்கெங்கோ விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆக, எப்போதோ, எங்கோ தயாரிக்கப்படும் மின்னணு சாதனங்களில் ரகசியமாக - தேவைப்பட்டால், தேவைப்பட்ட நேரங்களில் வெடிக்கச் செய்யக்கூடிய வெடிபொருள்களை யார் வேண்டுமானாலும் பொதிந்து வைத்திருக்கமுடியும்.

லெபனானுக்காக இன்று பேஜர்களிலும் வோக்கி டோக்கிகளிலும் பொதிந்துவைத்த வெடிமருந்தை செல்போன்களில், தொலைக்காட்சிப் பெட்டிகளில், லேப்டாப்களில், இயர்போன்களில்... என எங்கே வேண்டுமானாலும் மறைத்து வைக்க முடியும். சில ஆண்டுகள் கழித்துத் தேவைப்படுகிற நேரத்தில் வெடிக்கச் செய்யமுடியும்.

உலகம் முழுக்கப் பறக்கிற விமானங்களில் எல்லாமும் லட்சக்கணக்கான செல்போன்களும் மின்னணு சாதனங்களும் சேர்ந்துதான் பறந்துகொண்டிருக்கின்றன.

லெபனானில் ஹிஸ்புல்லாக்களுக்கு, காஸா ஹமாஸ் தீவிரவாதிகளுக்குப் பாடம் புகட்ட வேண்டும் அல்லது அச்சுறுத்த வேண்டும் என்று நினைத்துப் பல மாதங்களாகத் திட்டமிட்டு இந்தத் தாக்குதலை மொசாத் நடத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதே பாணியை உலகிலுள்ள எந்தவொரு தீவிரவாத அமைப்பும் எந்த நாட்டுக்கு எதிராகவும் பயன்படுத்த முடியும். இதையே நாடுகளுக்கு எதிராகத் திட்டமிட்டு எதிரி நாடுகளும் பயன்படுத்த முடியும்.

ஆக, லெபனான் வழியே எதிர்காலப் போர்களின் அடுத்த கட்டத்துக்கான உத்தி அறியப்பட்டு அல்லது அனைவருக்குமாக அம்பலப்பட்டுவிட்டதெனக் கொள்ளலாம். கவுன்ட் டவுன் ஸ்டார்ட்ஸ்!



# புலமைப்பரிசில் பரீட்சையை மீளநடத்துவதா? வினாக்களுக்கு புள்ளிகளை வழங்குவதா?

## விசாரணைகளின்பின் தீர்மானம் என்கிறார் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதி வினா பத்திரத்தில் மூன்று வினாக்களை நீக்கிவிட்டு அதற்கான புள்ளிகளை வழங்குவதா அல்லது பரீட்சையை மீண்டும் நடத்துவதா என்ற இறுதித் தீர்மானம் இடம்பெறும் விசாரணைகளின் பின்னரே எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

நடந்து முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாப்பத்திரம் பரீட்சைக்கு முன்னரே வெளியாகியுள்ளதா என தேடிப்பார்ப்பதற்காக பரீட்சைகள் திணைக்களம் தற்போது பூரண விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் முதலாம் பகுதி வினாப்பத்திரம் எனத் தெரிவித்து, போலி வினா பத்திரம்ஒன்றுசமூகவலைத்தலங்களில்பிரசுரமாகியமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பாகவே ஆரம்பகட்ட விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வினாப்பத்திரம் தயாரித்த குழுவை அழைத்து, குறித்த போலி வினா பத்திரம் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடிய பின்னர், குறித்த போலி வினா பத்திரத்தில், நிச்சயிக்கப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சை வினா பத்திரத்தில் இருந்த 3 வினாக்களுக்கு நிகரான வகையிலான 3வினாக்கள் மாத்திரம் இருந்ததாக அவர்களால் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.



அதன் பிரகாரம் குறித்த மூன்று வினாக்களையும் நீக்கிவிட்டு, பதிப்பீடுசெய்வதற்குபரீட்சைகள்திணைக்களம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

என்றாலும் புதன்கிழமை புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களின் பெற்றோர்கள் சிலர் பரீட்சை திணைக்களத்துக்கு முன்னால் முன்னெடுத்த ஆர்ப்பட்டத்தைத்தொடர்ந்து, ஏற்கனவே எடுத்த தீர்மானத்தை முன்னெடுப்பதா அல்லது பரீட்சையை மீண்டும்நடத்துவதா என்ற இறுதித் தீர்மானம், தற்போது இடம்பெற்றுவரும் விசாரணைகள் முடிவடைந்த பின்னர் எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (05)

# யாழில் வழிப்பறியில் ஈடுபட்ட தம்பதியினர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணத்தில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சங்கானை வைத்தியசாலை வீதியில், துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த பெண்ணொருவரின் சங்கிலியை, மோட்டார் சைக்கிளில் வந்த தம்பதியினர் அறுத்துக்கொண்டு தப்பி ஓட முயன்ற வேளை ஊரவர்கள் மடக்கி பிடித்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் அவர்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை கணவன்-மனைவி இருவரும் சுன்னாகம் பகுதியிலும் கடந்த வாரம் நபர் ஒருவருடைய சங்கிலியை அறுத்தனர் எனவும், அதனை யாழ். நகர் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் அடகுவைத்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் இருவரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (05)



# மட்டு. மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் 6 ஆயிரத்து 750 அலுவலர்கள் கடமையில்

## தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் தெரிவிப்பு

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காகவும் வாக்கெண்ணும் பணிகளுக்காகவும் 6 ஆயிரத்து 750 அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட உள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட உதவும் தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர்; மேலும் குறிப்பிடுகையில் -

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாந்தீவு வைத்தியசாலையில் இடம் பெற்று வந்த வாக்களிப்பு நிலையம் இம்முறை மட்டக்களப்பு புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம் மண்டபம் இலக்கம் மூன்றில் வாக்களிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது இலங்கையில் ஆகக் குறைந்த அதாவது இரண்டு பேர் வாக்களிப்பதற்கான வாக்களிப்பு நிலையமாகும்.

நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பதற்கான வாக்குப்பட்டிகள் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 7:00 மணி முதல் மட்டக்களப்பு தேர்தல் மத்திய நிலையமாக விளங்கும் மட்டக்களப்பு இந்து கல்லூரிகளில் இருந்து விநியோகிக்கப்பட்டன.

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காகவும் வாக்கண்ணும் பணிகளுக்காகவும் 6,750 அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட உள்ளனர்.

மாவட்டத்தில் மொத்தமாக 1,514 பொலிஸார் உள்ளிட்ட விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட உள்ளனர். இதுவரையிலும் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்படாத வாக்காளர்கள் நேரடியாக தபால் நிலையங்களுக்கு சென்று வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.(05)



# யாழ். மாவட்ட வாக்குச் சாவடிகளுக்கு வாக்குப் பெட்டிகள் அனுப்பப்பட்டன





யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்துள்ள 511 வாக்குச் சாவடிகளுக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து வாக்குப் பெட்டிகள் நேற்று எடுத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இந்த வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டன.

இன்று (சனிக்கிழமை) நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடெங்கும் மிகத் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.(05)



# திருகோணமலை மாவட்டத்தில் வாக்குபெட்டி விநியோகம் நிறைவு



திருகோணமலை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளையும்



அதிகாரிகளையும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கை நேற்று காலை முதல் மாலை வரை ; இடம்பெற்றது.

அத்தோடு, திருகோணமலையில் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக திருகோணமலை விபுலானந்தா கல்லூரி செயற்படவுள்ளது.

மொத்தமாக 318 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

அத்துடன், திருகோணமலை மாவட்டத்தில் 315,925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இன்று (சனிக்கிழமை) நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடெங்கும் மிகதுரிதமாக இடம்பெற்று வருகின்றன.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

## விசாணைகள்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் புள்ளிகளை வழங்குமாறும் இரு தெரிவுகள் -முன்வைக்கப்படுகின்றன.குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் விசாரணை அறிக்கை, கல்வி அமைச்சின்ஆரம்பக்கட்டவிசாரணைஅறிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

விசாரணைஅறிக்கைகள்கிடைக்கும்வரை பரீட்சை வினாத்தாள் திருத்தப்படமாட்டாது. மீண்டும் பரீட்சையை நடத்துவதற்கு தேவை ஏற்பட்டால் மீண்டும் பரீட்சையை நடத்துவோம். எவரேனும் முறையற்ற வகையில் செயற்பட்டிருந்தால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மாணவர்களுக்கு அநீதி இழைக்க இடமளிக்கமாட்டோம். ஆகவே, பெற்றோர் அமைதியுடன் செயற்பட வேண்டும் என வினையமாக கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## உப்போடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதுவித பாதிப்புமின்றிக் காணப்படுகிறது. இத்தீப் பரவலால் மின் இணைப்பு வயர்களும் பற்றி எரிந்ததால் ஆலயத்தை சுற்றி மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இந்தப் பேச்சி அம்மன் மிகவும் சிறப்பு வாய்ந்த தெய்வமாக இந்தப் பிரதேச மக்களால் போற்றப்படும் நிலையில், அம்மாளின் சிலை ஆரம்ப காலந்தொட்டு ஓலைக்குடிலில் வைக்கப்பட்டே வழிபடப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஆலயத்தை சுற்றி மறைப்புக்களை ஆலய நிர்வாகத்தினர் ஏற்படுத்தியுள்ளனர். இதனைப் பார்வையிட ஆலயத்தை நோக்கிப் பல்லாயிரக்கணக்கான மக்கள் படையெடுத்துள்ளனர். அவர்களை வீடு செல்லுமாறு ஆலய நிர்வாகத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தபடி இருந்தனர்.

## பொதுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்புவார் என்றார்.

இதேவேளை, நாமல் ராஜபக்சவின் இரண்டுபிள்ளைகளும்தனதுமாமியார்மற்றும் மாமனாருடன் வெளிநாடு சென்றுவிட்டனர் என்று ஊடகங்களில் பரவி வரும் செய்திகள் முற்றிலும் பொய்யானவை எனவும் அவர் தெரிவித்தார்.

## இயலாமையுள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது.

விசேட போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள துடன் மேலும் பல வசதிகள் தேர்தல் ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மானநஷ்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் தெரிவிக்கப்பட்டி ருந்தவற்றில் முக்கியமான பகுதிகளையே உதயன் பத்திரிக்கை வெளியிட்டிருந்தது.

இது தனது நற்பெயருக்குக் கழங்கம் ஏற்படுத்தியதாகத் தெரிவித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 1000 கோடி ரூபாய் கோரி மானநஷ்ட வழக்குத் தொடர்ந்திருந்தார். டக்ளஸ் தேவானந்தா தான் ஈபிடிபி, ஈபிடிபி என்றாலே டக்ளஸ் தேவானந்தாதான் என்கிற அடிப்படையில் தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார் என்று அமைச்சர் நீதிமன்றத்தில் கூறியிருந்தார்.

இந்த வழக்கில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் சட்டத்தரண கணேசராஜன் ஆகியோர் இறுதிவரையில் உதயன் பத்திரிகையின் சார்பில் வாதாடி இருந்தனர். அந்த வழக்கின் தீர்ப்பே தற்போது வழங்கப்பட்டுள்ளது.

வழக்குவிசாரணைகளின்போது, உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியில் இருந்த விவரங்கள் அதற்கு முன்னரே பல பத்திரிகைகளிலும் வெளியாகி இருந்ததை சட்டத்தரணி சுமந்திரன் ஆதாரங்களோடு நீதிமன்றத்தில்நிரூபித்திருந்தார். இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவிலும் டக்ளஸ் தேவானந்தாவைக் குற்றவாளியாகக் காட்டும் செய்திகள், கட்டுரைகள் வெளியாகி இருந்ததையும் அவர் நிரூபித்தார்.

அதேவேளை, ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ச இருந்தபோது நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் போர் நடந்த முழுக் காலப் பகுதியிலும் ஈபிடிபி ஆளும்தரப்பின் ஓர் அங்கமாக இருந்து வந்ததுடன் அரச துணைப்படையாகவும் செயற்பட்டது என்பதை நீதிமன்றத்திற்கு நிரூபித்ததுடன், காணாமற்போகச் செய்தல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பில் ஈபிடிபிக்கு எதிராகத் தமிழ் மக்கள் பலராலும் வழங்கப்பட்ட சாட்சியங்கள் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரங்களையும் சுமந்திரன் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

உதயன்பத்திரிகைச்செய்திவெளியானதன் பின்பே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகிஇருந்ததுஎன்பதைநீதிமன்றத்திற்குச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அந்த அறிக்கைக்கு எதிராக தான் வழக்குத் தாக்கல் செய்வார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தபோதும்அதைச்செய்யவில்லை என்பது மட்டுமல்லாமல் அவருக்கெதிராக வெளியான ஏனைய எந்தவொரு பத்திரிகைச் செய்திக்கு எதிராகவும் அவர் வழக்குத் தாக்கல் செய்யவில்லை என்பதையும் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

குறுக்கு விசாரணையின் போது, ஈபிடிபி அரச படைகளுடன் சேர்ந்து ஆ-ஷயுத ரீதியாகச் செயற்பட்டது தொடர்பில் இதற்கும் முன்னரே செய்திகள் வெளியாகி இருந்தன என்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்றுக்கொண்டிருந்தார். அதேபோன்று, 2016ஆம் ஆண்டு வெளியான 'சிலோன் ருடே'ஆங்கிலப் பத்திரிக்கைக்கு, அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச கருத்துத் தெரிவித்தபோது, ஈபிடிபியின் ஆயுதங்களைக் களைந்திருக்காவிட்டால் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண முதலமைச்சராகி இருப்பார் என்று கூறியிருந்தார் என்பதையும் நீதிமன்றத்திற்கு சுமந்திரன் ஆதாரத்துடன் வழங்கியிருந்தார்.

இவற்றின் அடிப்படையில், சுமார் 13 வருடங்களின் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழக்கைத் தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(உ)

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com








# முல்லையில் 137 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் மாலையே சென்று சேர்ந்தன





நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில்137 வாக்களிப்பு நிலையங்களுக்குரியவாக்குபெட்டிகள்முல்லைத்தீவுமகா வித்தியாலயத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கை ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நாடளாவியரீதியில் இடம்பெற இருக்கின்ற தேர்தலுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 137 வாக்களிப்பு நிலையங்களிற்கே இவ்வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இம்முறை தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 86,889 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் அவர்கள் வாக்களிப்பதற்குரிய 137 நிலையங்களுக்கும் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலிருந்து நேற்று (சனிக்கிழமை) காலை 7 மணி முதல் வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(05)

# லெபனானில் உள்ள இலங்கையர் தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்கவேண்டும்

## தூதரகம் வேண்டுகோள்

லெபனானில் உள்ள இலங்கையர்கள் தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்கவேண்டும் என லெபனானிற்கான இலங்கை தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

லெபனானில் உள்ள ஹெஸ்புல்லா அமைப்பின் பேஜர்கள் தொலைத்தொடர்பு சாதனங்கள் ஆயிரக்கணக்கில் வெடித்துசிதறிய சம்பவத்தின் பின்னர் லெபனானில் உள்ள இலங்கையர்களிற்கு இலங்கை தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையர்கள் மக்கள் அதிகளவில் கூடும் பகுதிகளைபொதுநிகழ்வுகளைநீண்டதூரபயணங்களை தற்காலிகமாக தவிர்க்கவேண்டும் என இலங்கை தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இக்காலப்பகுதியில்தொலைத்தொடர்புசாதனங்களை பயன்படுத்துவதை தற்காலிகமாக தவிர்க்குமாறும் தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.(05)

# 98 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள் அனுப்பிவைப்பு

## மன்னார் மாவட்டத்தில்





நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் இன்று (சனிக்கிழமை) காலை நடைபெறவுள்ளது.



அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் 98 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

குறித்தநிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள்அனைத்தும்நேற்று(வெள்ளிக்கிழமை) காலை 9 மணி முதல் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக செயற்பட்டு வரும் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து குறித்த வாக்குப்பெட்டிகள் அனைத்தும்வாக்களிப்புநிலையங்களுக்குபொலிஸாரின் பாதுகாப்புடன்பஸ்களின்மூலம்எடுத்துச்செல்லப்பட்டது.


இதேவேளை மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# அம்பாறையில் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் கொண்டுசெல்லப்பட்டன



இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஜனாதிபதி தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் வாக்குப் பெட்டிகள்எடுத்துச்செல்லும்பணிகள் நேற்று காலை 8 மணியிலிருந்து நடைபெற்றன.






இம்மாவட்ட வாக்கெண்ணும் நிலையமான அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் இருந்து வாக்குப்பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

வாக்களிப்புநிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள்அரசஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ்பாதுகாப்புடன் எடுத்துசெல்லப்படும்நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இத்தேர்தல் மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்களில் 555,432 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அதன்படிஅம்பாறைதொகுதியில் 188,222 பேர், சம்மாந்துறை தொகுதியில் 99,727 பேர், கல்முனை தொகுதியில் 82,830 பேர், பொத்துவில் தொகுதியில் 184,653 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

மேலும்,அம்பாறைமாவட்டத்தில் அம்பாறையில் 184 வாக்களிப்பு நிலையங்கள், சம்மாந்துறையில் 93 வாக்களிப்பு நிலையங்கள், கல்முனையில் 74 வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் பொத்துவில் தொகுதியில் 177 வாக்களிப்பு நிலையங்கள்அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போதுஅசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்கில் விசேட அதிரடிப்படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் தேர்தல் தினத்தில் நடந்துகொள்ளவேண்டியமுறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிஸார், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய தரப்புக்களுக்கு தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சிந்தக அபேவிக்ரம குறிப்பிட்டார்.

வாக்களிப்பு நிலையத்தில் செபரெம்பர் 21ஆம் திகதி காலை 07 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படும். பிற்பகல் 04 மணிக்கு வாக்களிப்பு நிலைய வரிசையில் தரித்து நிற்கின்ற வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பிற்பகல் 04 மணிக்கு பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க இடமளிக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# 145 வாக்காளர் அட்டைகள் பதுக்கப்பட்டனவா? தபால் ஊழியரின் செயல் குறித்து விசாரணை

புத்தளத்தில் 145 வாக்காளர் அட்டைகளை விநியோகிக்காமல் தபால் ஊழியர் ஒருவர் தம்வசம் வைத்திருந்ததாகஅவர்மீதுகுற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

புத்தளம் வாக்காளிப்பு நிலையங்களுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் முகவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பேரில் புத்தளம் மாவட்ட தபால் அத்தியட்சகர் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விநியோகிக்கப்படாத வாக்காளர் அட்டைகள் தபால் அத்தியட்சகரால் வணிக நிறுவனமொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

(05)

# ஜனாதிபதி தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட அரச அலுவலர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு

இன்று (சனிக்கிழமை) நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்புக் கடமைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அரச அலுவலர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழுவால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்படுவதாவது -

ஜனாதிபதிதேர்தல்வாக்கெடுப்புக்கடமைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளஅரசஅலுவலர்கள்அனைவரும் பொறுப்புடனும் புரிந்துணர்வுடனும் கூர்ந்த கவனத்துடனும் எவருக்கும் விசேட கவனிப்பைச் செலுத்தாமல்பக்கச்சார்பின்றிசெயற்படவேண்டும்.

தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் வாக்காளர்களுடனும்ஜனாதிபதிவேட்பாளர்களுடனும் அதிகாரமளிக்கப்பட்டமுகவர்களுடனும்நட்புறவுடன் சகிப்புத்தன்மையுடனும் செயற்பட வேண்டும்.

தேர்தல்நடைபெறும்காலப்பகுதியில்தங்களுக்கு வழங்கப்படும் கடமைகளைச் சிறப்பாகவும் பொறுப்புடனும் நிறைவேற்ற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)

# ஐஸ் போதைப்பொருள் பொதிசெய்த காதல் ஜோடி விடுதியொன்றில் கைது

பெலும்மஹர வெலிவேரிய வீதி பகுதியிலுள்ள விடுதியொன்றின் அறையொன்றில் போதைப்பொருளை பொதி செய்து கொண்டிருந்த காதல் ஜோடி கைது செய்யப்பட்டுள்ளதாக யக்கல பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பகஸ்பிட்டிய, கந்தமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடைய ஒருவரும் அவிசாவளை மீகஹா கொடல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடையவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருதாவது -

சந்தேகநபர் ஹிரியால பொலிஸாரால் இதற்கு முன்னர்போதைப்பொருள்குற்றச்சாட்டில்நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 26 கிராம் 250 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் மற்றவரிடம் இருந்து 3500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.(05)



# பீடி இலை பொதிகள் புத்தளத்தில் மாட்டின

புத்தளம் ஆலங்குடா பிரதேசத்தில் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் மற்றும் புத்தளம் மதுவரி திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இந்த பீடி இலைபொதிகள்கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்பின் போது, 810 கிலோ கிராம் நிறையுடைய 26 பீடி இலைபொதிகள்கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்டபீடிஇலைபொதிகள் மேலதிக விசாரணைகளுக்காக புத்தளம் மதுவரி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.(05)

# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் இளைஞன் கைது

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாகக்கொண்டுவரப்பட்டவெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞன் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கட்டுநாயக்கவிமானநிலையபொலிஸ்போதைப் பொருள்தடுப்புபிரிவினரால்வியாழக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தைச்சேர்ந்த 24 வயதுடைய இளைஞனேகைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அபுதாபியிலிருந்து வியாழக்கிழமைகட்டுநாயக்கவிமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில்சந்தேகநபரிடமிருந்து 5 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 25 சிகரெட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பானமேலதிகவிசாரணைகளை கட்டுநாயக்கவிமானநிலையபொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.09.2024இல் வெளியிடப்பெற்றது